12th August 1960]

Groundnut Flour Mills

* 122 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN, SRI M. P. SARATHI : } கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விகளுக்குப் பதில் அளிப்பாரா :—

(அ) ஐ. நா. நிதி உதவியுடன், சென்னை ராஜ்யத்தில் வேர்க்கடலை பணியார மாவு தயாரிக்கும் தொழிற்சாலை ஆரம்பிக்க எற்பாடாகியுள்ளதா ?

(ஆ) எந்தெந்த ஊர்களில் ?

(இ) தனியார் துறையிலா, பொதுத் துறையிலா ?

THE HON. SRI R. VENKATARAMAN (*a*) *to* (*c*) : The Government of India are contemplating the establishment of a plant in Madras State for the production of high protein food (groundnut flour) with the assistance of the United Nations Children's Fund. The location and other details of the plant are still under the consideration of the Government of India.

Agricultural Banks

* 123 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விகளுக்குப் பதில் அளிப்பாரா :—

(அ) 1959-ல் சென்னை ராஜ்யத்திலே எத்தனை விவசாய பாங்குகள் இருந்தன?

(ஆ) இப்பாங்குகளிலே எத்தனை விவசாயிகள் அங்கத்தினர்களாக இருந்தார்கள்?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Three hundred and thirty.

(*b*) As on 30th June 1959, the number of members in these banks was 264,291 (two lakhs, sixty-four thousand and two hundred and ninety-one).

SRI P. G. MANICKAM : ஸார். நடப்பு வருஷத்தில் இன்னும் எந்தெந்த இடங்களில் எவ்வளவு பாங்குகள் எற்படுத்தப்படும்?

THE HON. SRI R. VENKATARAMAN : ஒன்றும் எற்படுத்த உத்தேசமில்லை, அக்ரிகல்சுரல் பாங்குகள் இனிமேல் கூடுதலாக வைக்கக்கூடாது என்று நேஷனல் டெவலப்மெண்ட் கவுன்சிலில் முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

SRI M. D. THIAGARAJA PILLAI : அவ்வாறு பாங்குகள் எற்படுத்த வேண்டாம் என்று முடிவு செய்திருப்பதால், இனிமேல் கிராமங்களை அபிவிருத்தி செய்வதற்கு என்ன முறைகளை அமைப்பதற்கு அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது ?

THE HON. SRI R. VENKATARAMAN : ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு தனி சொஸைட்டி இருக்கவேண்டும் என்பதுதான் நமது சர்க்காருடைய கொள்கை, அதன் அடிப்படையில் ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு சொஸைட்டி எற்படுத்தவேண்டும்.

[12th August 1960

Sri T. T. DANIEL : May I know the reasons for arriving at the decision that there should not be any further expansion of agricultural banks?

The Hon. Sri R. VENKATARAMAN : It is ancient history. There has been difference of opinion between two sectors of co-operative opinion in this matter. Some believe that the large-size society is viable and therefore it should be encouraged. That was the view of the Rural Credit Survey Committee of the Reserve Bank. The opinion of the Planning Commission is that we should have a society for each village and it is only then, it will be able to serve the people of the particular village. The National Development Council decided that we should resort to a society for each village.

Sri S. M. ANNAMALAI : ஸார், விவசாய பாங்குகளின் மூலமாக, தான்ய ஈட்டுக் கடன்கள் வழங்கப்படுவதாகத் தெரிகிறது. இதன் மூலம் ஒரு சிலர்தான் பயனடைகிறார்கள். இதன் காரணமாக விலைவாசிகள் ஏறிப்போவதாக பொதுமக்கள் கருதுகிறார்கள். ஆகவே இதைத் தடுப்பதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது ?

The Hon. Sri R. VENKATARAMAN : கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிந்திருக்குமென்று நம்புகிறேன். அக்ரிகல்சரல் பாங்குகள் மூலமாக தான்ய கிடங்குகள் ஏற்படுத்துவதற்கு 10,000 ரூபாய் கடனாகவும், 5,000 ரூபாய் மான்யமாகவும் கொடுக்கிறார்கள். தனியார்களும் சில இடங்களில் தான்யக் கிடங்குகளை ஏற்படுத்துகிறார்கள்.

Sri K. S. SUBRAMANIA GOUNDER : சமீபத்தில் வெளியிட்ட மேத்தா கமிட்டி அறிக்கையில் விவசாய பாங்குகள் மூலமாக விவசாயத்தை அபிவிருத்தி செய்ய முடியும் என்று சொல்லியிருப்பதால், திரும்பவும் நமது ராஜ்யத்தில் விவசாய பாங்குகளை ஏற்படுத்துவதற்கு நமது அரசாங்கம் முன்வருமா எனக் கேட்க விரும்புகிறேன் ?

The Hon. Sri R. VENKATARAMAN : மேத்தா கமிட்டி ஒரு நடுத்தர மத்தியஸ்தம் செய்திருக்கிறது. அதாவது பழைய முறையில் அக்ரிகல்சுரல் பாங்குகள் பெருகவும் வேண்டாம். பிளானிங் கமிஷன் திட்டப்படி கிராம சொஸைட்டிகளும் அதிகமாக வேண்டாம், Viable சொஸைட்டியாக சற்றேறக் குறைய 1,000 ஜனத்தொகை இருக்கக்கூடிய இடத்தில் ஒரு சொஸைட்டி இருக்கவேண்டும். இதற்காக ஒன்றிரண்டு கிராமங்களை வேண்டுமானாலும் சேர்த்துக்கொள்ளலாம் என்று சிபாரிசு செய்திருக்கிறார்கள். சமீபத்தில் ஸ்ரீநகரில் நடந்த மகாநாட்டில் சென்னை ராஜ்யம் இந்த அபிப்பிராயத்தை வற்புறுத்தியிருக்கிறது. பிற ராஜ்யங்கள் வேறு அபிப்பிராயங்களைக் கூறின.

Sri V. K. RAMASWAMI MUDALIYAR : சில இடங்களில் விவசாய பாங்குகளை விஸ்தரிப்பதற்காக பக்கத்திலுள்ள ஒன்றிரண்டு கிராமங்களைச் சேர்ப்பதற்கு அனுமதி கேட்டால்,

12th August 1960]

அனுமதி கொடுக்க முடியாது என்று ரெஜிஸ்ட்ரார் சொல்லுகிறார். ஆகவே பக்கத்திலுள்ள கிராமங்களைச் சேர்ப்பதற்கு அனுமதி கொடுக்கும்படி அமைச்சர் அவர்கள் ரெஜிஸ்ட்ராருக்கு உத்தரவு போடுவார்களா ?

The Hon. Sri R. VENKATARAMAN : இந்தத் திட்டத்தை விஸ்தரிப்பதற்கு நமக்கு அதிகாரமில்லை. நமக்கு இப்போதுள்ள நிலையில் விவசாய பாங்குகளை விஸ்தரிப்பதற்கு முடியாது. இதனால்தான் இதை விஸ்தரிப்பதற்கு அனுமதி கொடுக்க முடியவில்லை. சென்னை ராஜ்யத்தைப் பொறுத்த அளவில் விவசாய பாங்குகள் நல்ல சேவை செய்திருக்கின்றன என்பதை எடுத்துச் சொன்னேன். ஆனால் அகில இந்திய அடிப்படையில் ஒரு கிராமத்திற்கு ஒரு சொஸைட்டி இருக்கவேண்டும் என்று முடிவு செய்திருக்கிறார்கள்.

T.I. Cycles Factory, Ambathur

*124 *Q.*—Sri S. PAKKIRISAMI PILLAI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the workers of the T.I. Cycles Factory, Ambathur have gone on a strike; and

(*b*) the steps taken by the Government to bring about a reconciliation?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) Yes, Sir. The workers went on a strike from 11th May 1960.

(*b*) The Commissioner of Labour, Madras, held discussions with the parties and as a result, a settlement was reached on 28th June 1960, in respect of all the outstanding issues in dispute. Normal work was resumed in the factory from 29th June 1960.

Sri S. PAKKIRISAMI PILLAI : இந்தத் தொழிலாளர்கள் தங்களுக்கு அட்ஜுடிகேஷன் வேண்டுமென்று கேட்டதற்கு ரீகன்ஸிலேஸேஷன் தோரணையில் ஒரு ஒழுங்கு நிலையை ஏற்படுத்தினார்கள். ஆனால் அட்ஜுடிகேஷனுக்கு விட்டிருந்தால் இப்போது கிடைத்திருப்பதைவிடக் கூடுதலாக கிடைத்திருக்கும். ஆகவே அட்ஜுடிகேஷனுக்கு விடாததின் காரணமென்ன என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?

The Hon. Sri R. VENKATARAMAN : ஜோஸ்யம் செய்வதில் யாருக்கும் எல்லை கிடையாது. அட்ஜுடிகேஷனுக்கு விட்டிருந்தால் இன்னும் அதிகமாகக் கிடைத்திருக்கும் என்று அங்கத்தினர் எண்ணுவதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது என்று எனக்குப் புரியவில்லை. அதோடு அட்ஜுடிகேஷனுக்குப் போயிருந்தால் இதைவிட இன்னும் குறைந்து போயிருக்காது என்று எப்படி நம்மால் உறுதி சொல்ல முடியும்? நேரிடையாக எவ்வளவு தூரம் தொழில் தகராறுகளில் தலையிட்டு தீர்த்துவைக்க முடியுமோ அவ்வளவு தூரம் தீர்த்து வைக்கவேண்டும் என்பதுதான் சர்க்காருடைய கொள்கையாகும். அதே முறையில்